# பொன்னீலனின் கரிசல் புதினத்தில் வர்க்கப் போராட்டம்

***முனைவர் அ. விஜயலட்சுமி***
உதவிப் பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம், தூத்துக்குடி
https://doi.org/10.5281/zenodo.15307899

## முன்னுரை

*மனித சமுதாயத்தில் ஏற்படும் போராட்டங்களை மாற்றங்களை இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. கூலியை முன்னிறுத்தும் போராட்டத்தைத் தொடங்கி, நாளடைவில் விழிப்புணர்வு பெற்று சமுதாயத்தை மாற்றும் போராட்டமாக வளர்ந்துள்ளது. உள்ளவனுக்கும் இல்லாதவனுக்கும் நடைபெறும் போராட்டம், முதலாளி வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் போராட்டம், அறிவாளிக்கும், அறியாமை வர்க்கத்திற்கும் போராட்டம், நன்மைக்கும் தீமைக்கும் நடைபெறும் போராட்டம் என்று வர்க்கப் போராட்டங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. பொன்னீலனின் கரிசல் புதினத்தில் வரும் வர்க்கப் போராட்டங்களையும் அதைக் களைவதற்கான காரணிகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.*

## போராட்டம்

*போராட்டம் என்ற சொல் ஆழ்ந்த பொருட் செறிவுடையது. ஆயுதங்களுடன் நடத்தும் போராட்டம், மனிதன் தன் மனதிற்குள்ளேயே அந்தரங்கமாக நடத்தும் மனப்போராட்டம், சமுதாயத்தினருடன் நடத்தும் போராட்டம் என்று போராட்டத்தை குறிப்பிடலாம்.*

*கரிசல் புதினத்தில் வரும் போராட்டமானது தொழிலாளர்கள் கூலிக்காக நடத்தும் போராட்டமாக, "வேல் கம்புக்காரர்கள், கவண்காரர்கள், கல்வீச்சுக்காரர்கள் என விவசாயிகள் தயாரானார்கள் (பொன்னீலன், கரிசல், ப- 249) என்பதன் மூலம் ஆயுதங்களுடன் நடத்தும் போராட்டம் புலப்படுகிறது. போராட்டத்தில் எதையும் இழக்கத் தயாராக இருக்கின்ற நிலையை, மொதல்ல இந்தப் போராட்டத்தில ஒனக்கு நம்பிக்கை இருக்கா, அதச்சொல்லு நம்ம லட்சியத்துக்காக ஒன்னோட வீடு, வாசல், பொண்டாட்டி, புள்ள, ஆடு, பன்னி எல்லாத்தையும் இழக்கிறதுக்கு துணிச்சல் இருக்கா (பொன்னீலன், கரிசல், ப. 288) என்று தொழிலாளிகள் போராட்டத்தின் மூலம் கிடைக்கும் விளைவுகளை புரிந்து கொண்டு எதையும் இழக்கத் துணிந்தவர்கள் என்பதைக் கரிசல் புதினம் காட்டுகின்றது.*

## போராட்டமே அடித்தளம்

*பெருமாள்புரத்துக்கு ஆசிரியராகப் பணிபுரிய வரும் கண்ணப்பன் அங்குள்ள மக்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் கொடுக் கப்படாததைக் கண்டும், ஏழைகள் வறுமையில் வாடுவதைக் கண்டும், கல்வி அறிவு இன்றி அறியாமையில் வாழ்வதைப் பார்த்தும், அம்மக்களோடு இணைந்து வாழ்ந்து கிராம மக்கள் உயர்வுக்காகப் பாடுபடுகிறான். கண்ணப்பனின் தோழர்கள், வீரையன், பட்டாளத்தார், ரங்கண்ணன், கொண்டப்பன் போன்றோர்களுடன் சேர்ந்து சங்கம் அமைக்கின்றனர். கூலி கொடுக்காத முதலாளிசக்கரைச் சாமியை எதிர்த்துப் போராடுகின்றனர்.*

*உழைக்கும் மக்கள் கொதித்தெழுந்து போராடுவதையே கரிசல் புதினத்தின் போராட்ட அடித்தளமாகப் படைத்துள்ளார் பொன்னீலன்.*

## போராட்டமே கரு

*நகர்ப்புறங்களில் ஆலைகளிலோ, அலுவலகங்களிலோ பணிபுரியும் பணியாளர்கள் ஊதிய உயர்வு வேண்டியோ, வேறு பல*

*காரணங்களிலோ போராட்டம் நடத்துகின்றனர். அதுபோல கிராமப்புறங்களில், விளைநிலங்களில் உழைத்து வாழ்கின்ற பாட்டாளிகள் விவசாயிகள் தங்களின் முழு உரிமைக்காகப் போராடுவதே கரிசல் புதினத்தின் கருவாக அமைந்துள்ளது.*

*என்னைய்யா இந்த மொதலாளிதங்கையால இந்த நெலத்தில் இம்புட்டு மண்ணள்ளிப் போட்டிருப்பாரா? இந்த கட்டாந்தரைய எவன்யா நெலமாக்கினான். நீயும் நானுந்தான் ஒன் அப்பனும் என் அப்பனுந்தான் நம்ம ஒழைப்புக்கு வெல அவரு குடுக்குற இந்த ஒண்ணரை ரூவாக் கூலியா? இல்ல அதுக்கும் மேல! அரப்பட்டினியும், முழுப்பட்டினியுமாகக் கெடந்து புள்ளைய வளர்க்கிறாப்ல வளத்தமே இப்படித் திடீரென்று போச்சொல்லவா? இல்லவே இல்ல நம்ம ஒழைப்புக்கு வெல் இந்த நெலத்துல நமக்குள்ள உரிமதான் இதுல ஒழச்சிச் சாப்பிடறதுக்குள்ள உரிமை (பொன்னீலன், கரிசல், ப. 239) என்று குறிப்பிடுவதிலிருந்து, முதலாளிக்கும் தொழிலாளிக்கும் போராட்ட உணர்வு வெளிப்படுவதை அறியமுடிகிறது.*

**பொருளாதார வர்க்கப் போராட்டம்**

*பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருக்கின்ற முதலாளிகள், தொழிலாளிகளை அடிமையாக நடத்துவதுண்டு. கரிசல் புதினத்தில் உள்ள முதலாளி சக்கரைச் சாமியிடம் கடன்பட்ட பட்டாளத்தார் சிக்கலால் குறிப்பிட்ட நாளில் முழுத்தொகையையும் கொடுக்க முடியாத காரணத்தால் முதலாளி அவரைப் பார்த்து, "நீ ஒரு தகப்பனுக்குப் பிறந்தவன் தானாயா? வாக்குச் சுத்தம் வேண்டாம். பணந்தான் இல்ல வாய்க்கூச்சமுமா இல்லாமல் போச்சி ஒரு மாசமாம் ஒரு மாசம் பள்ளிக் கொடத்துக்குப் போயிருக்கியா? ஒரு மாசத்துக்கு எத்தின நாளு தெரியுமா? பெரீசா பட்டாளத்திலேயும் இருந்தியாமே" என்று ஏளனமாகப் பேச, இதுதான் கடாசி மொதலாளி, இந்த ஒருவாட்டியும், எப்படியாச்சும் தயவு பண்ணி உட்டுக்குடுங்க என்றார். உடனே முதலாளி கெடக்குறது கீழண்ணாலும் நெனப்பெல்லாம் ரெம்ப ரெம்ப மேல, குடிக்கக் கஞ்சித் தண்ணி இல்ல மகனக் கொண்டு கொம்புல ஏத்துராரு. சாமானியப் படிப்பா பெரிய காலேசிப் படிப்பு..... வக்காளி இன்னும் ஒரு வாரத்துக்குள்ள தரல்ல, நடக்குறது வேற," (பொன்னீலன், கரிசல்,ப.22) என்று இரக்கமில்லாமல் பேச, "பேச்ச வளத்தாதீங்கய்யா ஒங்க பணந்தான வேணும், நாள காலையிலே வாங்கிக்கிருங்க மனுசன மனுசனா நெனைக்கனும் மொதலாளி பணம் இன்னும் இருக்கும் நாள போயிரும் என்று சொல்லிவிட்டு பாதிப்பணத்தைக் கொடுத்துவிட்டுச் செல்கிறார்.*

**முதலாளித்துவமும், தொழிலாளியும்**

*தொழிலாளர்களை அடிமைப்படுத்திக் காலடியில் நசுக்கிக் கொண்டு உற்பத்தியைப் பெருக்க நினைப்பது முதலாளித்துவத்தின் கொள்கையாக காணப்படுகிறது.*

*தொழிலாளி வர்க்கம் தனது நலன்களின் அடிப்படையில் கோரிக்கைகளை முன்வைத்து அணிதிரளத் தொடங்கியதும், தேசிய முதலாளி வர்க்கம் தான் காட்டிய அந்த சொர்ப்பமான சனநாயக மனோபாவத்தைக் கைவிட்டது (க.கைலாசபதி, தமிழ்நாவல் இலக்கியம், ப.262) என்று கலாநிதி கைலாசபதி கூறுகிறார்.*

**முதலாளி தொழிலாளி வர்க்கப் போராட்டம்**

*நிலவுடைமைச் சமுதாயத்தில் நிலம் என்ற உற்பத்திச் சாதனத்தை உடைமையாகக் கொண்ட முதலாளி வர்க்கமும், உழைப்பையே மூலதனமாகக் கொண்ட தொழிலாளி வர்க்கமும் முதன்மையானவையாகக்கருதப்படுகின்றன.*

*"முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளி தொழிலாளி என்பது முதன்மையான வர்க்கப் பிரிவு தொழில் உற்பத்தியில், உற்பத்தி சாதனங்களை உடைமையாகக் கொண்டு உற்பத்தி முறைகள், உற்பத்தி பொருட்களின் விநியோகம், அதன் பலன் ஆகியவற்றை*

*உரிமையாகக் கொண்டவன் முதலாளி என்றால், அத்தகைய உற்பத்தி உறவுகளில் உழைப்பையும், உழைப்புத் திறனையும் கூலியாகத் தருகிறவன் தொழிலாளியாவான் (தி.சு.நடராசன், திறனாய்வுக் கலை,ப-183) என்று தி.சு.நடராசன் கூறுகிறார்.*

*கரிசல் புதினத்தில் பெருமாள்புரம் கிராம மக்கள், தங்களுக்குக் கூலியை உயர்த்திக் கொடுக்கச் சொல்லி கேட்கும் நிலையை, ''வகுத்துப்பசி தாங்காமக் கேக்கிறோம் மொதலாளி மத்தப்படி ஒங்க மனசுக்கு எதிரா ஒரு வார்த்த சொல்லுவோமா மொதலாளி (பொன்னீலன், கரிசல்,ப.49) என்று வெள்ளைச்சாமி கூனிக்குறுகி நின்று சொல்லும் கூற்றில் தொழிலாளி வர்க்கத்தினரின் ஏழ்மை புலப்படுகிறது.*

*முதலாளி தன் சொந்த நிலத்திற்குள் யாரையும் இறங்கக்கூடாது என்று சொன்னவுடன் தொழிலாளர்கள் கொதித்தெழுந்து, இந்தா எந்தப்பய வந்து வேல பாக்கிரான்னு பார்த்துக் கிர்லாம் வாங்கயா போவோம் வாங்க வாங்க எல்லாம் ராத்தரி பேசிக்கிரலாம் அடுப்பிலே எரிய வேண்டிய தீ நம்ம அடிவயித்திலே எரியுதாக்கும் இது வச்சவனச் சும்மா விடக் கூடாது (பொன்னீலன், கரிசல்,ப.226) என்று தன் ஆற்றாமையைக் கூறுகின்றான் ரங்கண்ணன் நிலத்தில் யாரும் இறங்கக் கூடாது என்றதும், கொண்டப்பன், ''எறங்கதானடா போறொம் பாரு ஏய், நாங்க இந்த நெலத்துல ஒழைக்கப் பொறந்தவுக இத உட்டு எங்கேயும் போகப் பொறதில்ல. இந்த நெலத்தில் இன்னொருத்தன் கால் வைக்க விடப்போவதுமில்ல இந்த மண்ணில் விவசாயம் பார்ப்போம் அல்லது இதிலேயே சாவோம். (பொன்னீலன், கரிசல்,ப.239) என்று தொழிலாளி வர்க்கத்தின் நிலையை ஆசிரியர் தம் படைப்பு மூலம் வெளிப்படுத்துகிறார். ஆணவம் மிக்க முதலாளி வர்க்கமோ தன் ஆதிக்க உணர்வால் ஊரையே தீயிட்டு கொழுத்திவிட்டு, கொலை செய்யப்பட்டவனைப் பார்த்துக் கொண்டு நிற்கும் கொலைகாரனைப் போல அவர் அந்த பிரம்மாண்டமான அழிவைப் பார்த்துக் கொண்டு நின்றார். (பொன்னீலன், கரிசல், ப.397) இதைப் பார்த்த மக்கள் கொதித்தெழுந்து முதலாளியையும், அவனது கூட்டாளிகளையும், அடித்துக் கொல்வதாக காட்டுகிறார் ஆசிரியர்.*

*தொடக்கத்தில் தாழ்ந்த நிலையில் கெஞ்சிப் பார்த்த தொழிலாளி வர்க்கம் தலைக்கு மேல் வெள்ளம் வரும்போது, தம் உயிரை ஒரு பொருட்டாக மதிக்காமல் போராடி வெற்றி பெற்றதை ''கரிசல்'' புதினம் மூலம் படைப்பாளி பொன்னீலன் எடுத்துரைக்கிறார்.*

## தொழிலாளி விழிப்புணர்வு பெறுதல்

*குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கின்ற தொழிலாளிகள், தன் உழைப்பிற்கேற்ற கூலி கிடைக்காததால், பசியாலும், பட்டினியாலும் தனது குடும்பங்கள் வறுமையில் வாடுவதை நினைத்து விழிப்புணர்வு பெறுகின்றனர். கூலி வேலை செய்கின்ற படிப்பறிவில்லாத வீரையன் ஆசிரியராகப் பணிபுரிகின்ற கண்ணப்பனிடம் ''நம்மூர்ல ஒரு படிப்பகம் கட்டலாமாயா (பொன்னீலன், கரிசல், ப.56) என்றதும் கண்ணப்பன் ஆச்சர்யத்துடன் அவனை நோக்கி, இந்தகரிசல் மண்ணில் வாழ்க்கையை வியர்வையாகச்சிந்தும் இவனுக்கு இப்படி ஒரு எண்ணம் இருக்கிறதே என்று வியப்படைகிறான். இதன் மூலம் விழிப்புணர்வு நிலையை அறிய முடிகிறது.*

## வர்க்க வேறுபாடு களைவதற்கான காரணிகள்

*முதலாளி தொழிலாளி வேறுபாடு நீங்கி உள்ளவன், இல்லாதவன் என்ற நிலை மாறி வர்க்க பேதங்கள் களைவதற்கான காரணிகளையும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.*

## விவசாய சங்கம் அமைத்தல்

*படிப்பில்லாத, உலகமறியாத, சுரண்டல் கொடுமைக்குள்ளான, பண்டைய பழக்கங்களுக்கு அடிமையாகி, சுய நம்பிக்கையற்று இருட்டில் உழன்று வந்த கூலி விவசாயிகளுக்காக விவசாயசங்கம் அமைக்கப்பட்டது. இச்சங்கம் அக்கம்பக்கத்தில் உள்ள விவசாயிகளை ஒன்று*

*திரட்டி உழைப்பவர்களுடைய விடுதலைக்காகப் போராடி வெற்றியும் பெறுகின்றனர்.*

**வாசகர் சாலை அமைத்தல்**

*அடிமைத்தளையில் விழுந்து கிடக்கும் கூலிகள் மனதில் வாழ்க்கையும் வயிறும் விழித்தெழுந்து, உறங்கும் மூளையைத் தட்டி எழுப்பி நம்மூர்ல ஒரு படிப்பகம் கட்டலாமாயா என்று கேட்டதும், கட்டாயம் தொடங்கணும்ங்க கட்டிடத்தக் கட்டிக் குடுங்க எஞ்செலவுல செய்தித் தாளெல்லாம் வாங்கிப் போடுறேன். மொதலாளிக்கிட்ட சொன்னேன். செய்தி படிச்சா ஊரு கெட்டுப் போகும்ங்காரு (பொன்னீலன், கரிசல், ப.56,57) என்ற முதலாளி வர்க்கத்தின் சம்மதமில்லாமல் அல்லும் பகலும் விழித்திருந்து படிப்பகம் கட்டி முடிக்கின்றனர்.*

**சமுதாய மாற்றம்**

*கரிசல்புதினத்தில்கூலிக்கானபோராட்டம், வர்க்கப் போராட்டமாக மாறி இறுதியில் விழிப்புணர்வு பெற்று படிப்பகம் அமைத்தல், சங்கம் அமைத்தல் என்று முன்னேறி சமுதாயத்தை மாற்றுவதாக அமைந்துள்ளது. கரிசல் மக்களின் மரபு வழிப்பட்ட வாழ்க்கையின் அடித்தளமான வாழ்க்கையை, படிப்பவர் வெறுக்கும் படியாகவும், தம் வாழ்க்கையின் உண்மை நிலையை உணர்ந்து ‘‘மனிதன்’’ என்ற சிறப்புக் கேற்ற வாழ்க்கையைத் தாம் பெறுவதற்குத் தடையாயுள்ள காரணங்களை உணர்ந்து அவற்றை நீக்கத் தம்மால் தான் முடியும் என்பதை உணர்ந்து தன்னம்பிக்கையுடன் போராடி, புதிய சமுதாயமாக மாற்றிக் காட்டுவதை கரிசல் புதினம் வழி படைப்பாளி பொன்னீலன் சித்தரித்துக் காட்டுகிறார்.*

**முடிவுரை**

*வர்க்கப் போராட்டங்கள், கூலிக்கான போராட்டமாகத் தொடங்கி சமுதாயத்தை மாற்றும் போராட்டமாக மாறுவதை அறிய முடிந்தது. பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருக்கின்ற முதலாளிக்கும், விவசாயக் குடியில் தோன்றிய மக்களுக்கு இடையேயான பொருளாதார வர்க்கப் போராட்டமாக நடைபெறுகிறது. தொழிலாளர்கள் ஒற்றுமை உணர்வோடு படிப்பகம் அமைத்தும், விவசாய சங்கம் அமைத்தும் வர்க்க வேறுபாடுகளைக்களையும் வழிமுறைகளையும் காட்டுகிறார். தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்துடன் தன்னிம்பிக்கையோடு போராடி தொழிலாளர்களின் ஒற்றுமையால் சமுதாய மாற்றம் பெறுவதையும் அறிய முடிகிறது.*